பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
21 06 2025 **SATURDAY** 6 30 **PM**

வணக்கம்-மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு யோகக்கலை அருமருந்தாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் முக்கிய ரயில் நிலையங்கள் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. பொதுசுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மாநில அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. துனிஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் - நிதின்குமார் சின்ஹா இணை பட்டம் வென்றது.

**>>>>>><<<<<<**

யோகா, உலகில் உள்ள அனைவரையும் ஒன்றிணைக்கும் கருவியாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

வயது மற்றும் எல்லைகளை கடந்து, யோகா அனைவருக்குமான வாழ்வியல் முறையாக திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

உடல் ஆரோக்கியம் மற்றும் மன அமைதிக்கு யோகக்கலை அருமருந்தாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், நினைவு தபால்தலையையும் பிரதமர் வெளியிட்டார்.

இந்த யோகா தின நிகழ்ச்சியில், 28 கிலோமீட்டர் தூரம் வரை பங்கேற்று யோகா பயிற்சியை மேற்கொண்டு, கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சென்னை, தாம்பரத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவ வளாகத்தில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பங்கேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவில் தோன்றிய பழம்பெருமை வாய்ந்த கலையான யோகக்கலை, இன்று உலகம் முழுவதும் உள்ள மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

யோகக்கலை பல்வேறு நோய்களுக்கு சிறந்த மருந்தாகவும் உள்ளது என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை சார்பில் சென்னையை அடுத்த பூந்தமல்லியில் உள்ள தேசிய பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான நிறுவன வளாகத்தில் யோகா தின நிகழ்ச்சிகள் வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த யோகப் பயிற்சி தங்களுக்கு மனதளவில் புத்துணர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று மாற்றுத்திறனாளி மாணவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – மாணவர்கள் 50 செகண்ட்ஸ்)

ராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில், கடலோரக் காவல்படையினர் ஜல யோகாசனம் மேற்கொண்டனர்.

மாமல்லபுரம் கடற்கரை கோயில் அருகே நடைபெற்ற யோகா தின கொண்டாட்டத்தில் தாம்பரம் விமானப்படை வீரர்கள் யோக பயிற்சியை மேற்கொண்டனர்.

காஞ்சிபுரத்தை அடுத்த ஏனாத்தூரில் உள்ள பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் 5 முதல் 75வயது வரையுள்ள நபர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, யோக பயிற்சியை மேற்கொண்டனர்.

உலகின் ஆரோக்கியத்திற்கான யோகா என்பதை மையக் கருத்தாக கொண்டு இந்த ஆண்டுக்கான சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது.

>>>>>><<<<<<

தமிழகத்தில் ரயில்வே திட்டங்களுக்கு மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் கூறியுள்ளார்.

திருவண்ணாமலையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னை எழும்பூர் ரயில் நிலையம், 800 கோடி ரூபாய் செலவில், தரம் உயர்த்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் (1) 54 செகண்ட்ஸ்)

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று டாக்டர் எல். முருகன் நம்பிக்கை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் (2) 20 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகத்தில் பொதுசுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், புகையிலை இல்லாத இளைஞர்கள் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக, தமிழகத்திற்கு மத்திய சுகாதார அமைச்சகம் விருது வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்வது, 18 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களைச் சுற்றி 100 மீட்டர் சுற்றளவிற்கு புகையிலைப் பொருட்களை விற்பனை செய்ய விதிக்கப்பட்டிருந்த தடை போன்றவை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புகையிலையால் ஏற்படும் தீமைகள் குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 60 நாட்கள் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதையும் திரு. மா. சுப்பிரமணியன் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் மக்கள் விரோத ஆட்சி நடைபெற்று வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில அரசின் குறைகளை மறைப்பதற்காக, கேலிச் சித்திரங்களை வெளியிட்டு, அவதூறு செய்திகளை திமுக பரப்பி வருவதாக குற்றம் சாட்டினார்.

கீழடி ஆய்வுகள் தொடர்பாக அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. எடப்பாடி பானிசாமி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு இடிமின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில் 5 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை மாநில அமைச்சர் திரு. சிவங்சர் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

ஈரானில் சிக்கித் தவிக்கும் நெல்லை மாவட்ட மீனவர்களை பத்திரமாக தாயகம் அழைத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கக் கோரி ஆட்சியர் திரு. சுகுமாரிடம் மீனவர்கள் கோரிக்கை மனு அளித்தனர்.

>>>>>><<<<<<

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் கோவில் பூசாரிகள் சங்கக் கூட்டம் இன்று நடைபெற்றது.

**>>>>>><<<<<<**

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை ட்ரோன் கேமரா மூலம் பதிவு செய்த இரண்டு பேரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**>>>>>><<<<<<**

துனிஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் - நிதின்குமார் சின்ஹா இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-4, 6-4 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் **Matthew Ranki – Marcus Walters** இணையை வென்றது.

**>>>>>><<<<<<**

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

லீட்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 471 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**>>>>>>END<<<<<<**